UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
PERIODICALS DIVISION
LIBRARY

பக்கங்கள் 6

ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 கார்த்திகை 12 முஹர்றம் 18 இதழ் 288
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27-11-80

'தமிழ் ஈழம் கிடைக்கும்வரை பிரிட்டனில் பிரசாரம் செய்ய இளைஞர்க்கு உரிமையுண்டு'

பாராளுமன்றத்தில் 'யோகேஸ்'

(கொழும்பு)

'தமிழ் ஈழம்' அமைக்கப்படும்வரை பிரிட்டனில் உள்ள தமிழ் இளைஞர்கள் அங்கு தமிழ் ஈழத்திற்காகப் பிரசாரம் செய்வர். அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட அவர்களுக்கு உரிமை உண்டு.

இவ்வாறு யாழ்ப்பாணம் எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

சர்வதேச அரங்கில் இலங்கைக்கு இருந்துவரும் நற்பெயரைக் கெடுக்கும் வகையில் பிரிட்டனில் உள்ள தமிழ் இளைஞர்கள் பொய்ப் பிரசாரம் செய்து வருகிறார்கள் என்றும் இங்குள்ள கட்சி ஒன்றுக்கு

8-ம் பக்கம் பார்க்க)

அமெரிக்க இராணுவத் தளம்: திருமலையில் அமைக்கப்படாது

செய்திகள் தவறானதென்று அமைச்சர் ஹமீட் விளக்கம்

(கொழும்பு)

திருகோணமலையை இராணுவத் தளமாக பயன்படுத்த அமெரிக்காவுக்கு இலங்கை அரசு அனுமதி வழங்கவில்லை என்றும் அமெரிக்காவுக்கு இலங்கையில் தளம் அமைக்க எமது அரசு அனுமதி வழங்கியுள்ளதாக பத்திரிகைளில் வெளிவந்த செய்தி தவறானது என்றும் வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீட் நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று பாதுகாபபு அமைச்சுக்கான நிதிஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தின்போது பேசுகையிலேயே ஜனாப் ஹமீட் மேற்கண்டவாறு கூறினார்.

அணிசேராக் கொள்கையில் அசையாத நம்பிக்கை கொண்டுள்ள இலங்கை அக்கொள்கையையே தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகிறது என்றும் எமது நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையில் எதுவித மாற்றமும் செய்யப்படவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

ஜனாப் ஹமீட் மேலும் பேசுகையில் கூறியதாவது;

சர்வதேச அரங்கில் இலங்கைக்கு முன்பு இருந்ததைவிட தற்போது நல்ல மதிப்பு இருக்கிறது. உலக நாடுகளிடையே எமது நாட்டின் மீது முன்னர் எப்போதுமே இதுபோன்ற மதிப்பும் நல்லெண்ணமும் இருந்ததில்லை. நாட்டின் நன்மைக்காக இந்த நிலைமையைப் பயன்படுத்த அரசு சகல வழிகளிலும் முயன்றுவருகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

வேலையிழந்தவர்க்கு வேலை: ஜனாதிபதி அறிவுறுத்தல்!

(கொழும்பு)

வேலைநிறுத்தத்தினால் வேலை இழந்தவர்கள் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படும்போது ஒருவருட காலத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே நியமிக்கப்படுவார்கள்.

வேலைஇழந்தவர்களின் விண்ணப்பங்களை பரிசிலனை செய்வது தொடர்பாக அமைச்சரவைக்கு ஜனாதிபதி வழங்கியுள்ள அறிவுறுத்தலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வேலையிழந்தவர்களின் விண்ணப்பங்கள் தொடர்பாக பரிசீலனை செய்யும்போது அமைச்சர்கள் பின்பற்றவேண்டிய விதிமுறைகள் பற்றி ஜனாதிபதி அறிவித்துள்ளார். அவை வருமாறு:

உறுதிப்படுத்தப்பட்ட ஊழியர்களின் விண்ணப்பங்கள் மாத்திரமே பரிசீலிக்கப்பட வேண்டும்.

சமயா சமய ஊழியர்கள் தகுதிகாண் நிலையிலுள்ள ஊழியர்கள் போன்றோருக்கு வேலை வழங்கப்படக்கூடாது.

அக்டோபர் 31ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலிக்க வேண்டும்.

மீண்டும் வேலை வழங்கும்போது ஒரு வருட காலம் தகுதிகாண் நிலையில் நியமிக்க வேண்டும். அக்காலப்பகுதியில் தமது கடமையைப் புறக்கணித்தால் தவறான வழியில் நடந்தால் வேலையிலிருந்து நீக்கப்படவேண்டும்.

வேலைநிறுத்தக் காலத்திற்கான சம்பளம் எதுவும் வழங்கப்படக்கூடாது.

வேலைநிறுத்தக்காரர்களின் இடத்திற்கு நியமிக்கப்பட்டவர்களின் நியமனங்கள் பாதிக்கப்படாதவகையிலேயே புதிய நியமனங்கள் இடம்பெற வேண்டும். (கு)

100 இராணுவ சிப்பாய் பதவிக்கு 13,000 பெண்கள் விண்ணப்பம்

(கொழும்பு)

இலங்கை இராணுவப் படையில் பெண் சிப்பாய்களுக்கான 100 காலி இடங்களுக்கு 13 ஆயிரம் பெண்கள் விண்ணப்பித்துள்ளனர்.

ஆண்களைவிட பெண்களே இப்போது இராணுவத்தில் சேரவிரும்புகின்றனர் என்று இராணுவப் பிரிவின் நிர்வாக இயக்குனர் பிரிகேடியர் காமினி ஜெயசிங்க தெரிவித்தார். (இ)

யாழ். பழைய பூங்காவிலுள்ள

இராணுவ முகாம் அகற்றப்படும்

பிரதி அமைச்சர் உறுதி

(கொழும்பு)

யாழ். பழைய பூங்காவில் உள்ள இராணுவத்தினர் இவ்வாண்டு இறுதிக்குள் அங்கிருந்து வெளியேற்றப்படுவர் என பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரி. பி. வெரப்பிட்டிய உறுதியளித்தார்.

யாழ். பழைய பூங்காவில் குடியிருக்கும் இராணுவத்தினரை வெளியேற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறியபோது குறுக்கிட்ட சமயமே பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு. வெரப்பிட்டிய மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ் பகுதிகளில் தமிழ் தெரிந்த பொலிசாரை நியமிக்கவேண்டும் என்றும் திரு. அமிர்தலிங்கம் சபையில் கேட்டுக் கொண்டார். (இ)

ஹமீட்டுக்கு 'யோகேஸ்' நன்றி

(கொழும்பு)

ஆப்கானிஸ்தான்எல்லையில் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்ட இரண்டுதமிழ் இளைஞர்களின் சடலங்களை அங்கிருந்து யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடன் மேற்கொண்டமைக்காக வெளிநாட்டு அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீட்டுக்கு நேற்று பாராளுமன்றத்தில் யாழ் எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் நன்றி தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தின்போதே திரு. யோகேஸ்வரன் வெளிநாட்டு அமைச்சருக்கு நன்றி கூறினார். (இ)

21,42,877பேருக்கு வேலையில்லை

லண்டன். நவ. 25

பிரிட்டனில் தற்போது வேலையற்றோரின் எண்ணிக்கை 21 லட்சத்து 42 ஆயிரத்து 877ஆக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலையற்றோரின் தொகை இங்கு ஒரு வருட காலத்தில் 60 வீதமாக அதிகரித்துள்ளது என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

கையிருப்பில் உண்டு 350 FG வான்கள் குண்டசாலை புத்தம் புதிய தேக்கு பொடியுடன்

விபரங்கட்கு :
துரை
ஆர். ஜி. பில்டிங்,
66, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 7750 - 7786

noolaham.org | aayanaham.org

வரி விளம்பரம்

விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட சிறந்த ரக உதைபந்தாட்ட பந்துகள் எம்மிடம் கிடைக்கும். விபரங்கட்கு: 278, ஆஸ்பத்திரி வீதி, (ஆஸ்பத்திரிக்கு முன்பாக), யாழ்ப்பாண[illegible].

7433

மானிப்பாய் ஆஸ்பத்திரிக் கருகாமையில் புதிதாகக் கட்டப்பட்ட வீட்டுடன் மூன்றரைப் பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; S. S. S. நாதன், ஆஸ்பத்திரி ரோட், மானிப்பாய்.

7434

மல்லாகம் சந்தியிலிருந்து 100 யாருக்குள் காங்கேசன்துறை வீதியில் எல்லா வசதிகளும் கொண்ட ஆறு அறை வீடும் காணி 6 பரப்பும் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் நந்தாவில், கொக்குவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. ச. சிவசுப்பிரமணியத்துடன் தொடர்பு கொள்ளவும்.

7443

தேவை

யாழ்நகர் பெரியகடைப் பகுதியில் அமைந்திருக்கும் புடைவை ஸ்தாபனத்திற்கு ஆண், பெண் விற்பனையாளர்கள், கணக்காளர், பில்கிளார்க் ஆகியோருக்கு வெற்றிடமுண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 7444, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம்.

7444

எங்கள் ஆங்கில வைத்திய கிளை வைத்தியசாலையில் வேலை செய்வதற்கு ஆங்கில வைத்திய அறிவுடைய ஆண்கள், பெண்கள் தேவை. விரும்பியவர்கள் நேரிலோ கடித மூலமாகவோ தொடர்பு கொள்ளவும். டாக்டர் N. இராசதுரை மெடிக்கல் சென்றர் 82, கடற்கரை வீதி, நாவாந்துறை.

744[illegible]

கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்
போசனசாலை சப்ளைசெய்பவர் பதவி

எமது சங்கத்தால் பரந்தனில் நடாத்தப்படும் போசனசாலையில் சப்ளை செய்பவர்கள் பதவிக்கு அனுபவம் வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் செய்பவர்கள் பொதுமுகாமையாளர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம் பரந்தன் என்ற முகவரிக்கு 30-11-80க்குப் பிந்தாமல் அனுப்புதல்வேண்டும்.

அனுபவத்துக்கும், திறமைக்கும் ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

பொதுமுகாமையாளர்

கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்

7446

ம.ம.வி. வெற்றி

(பலாலி)

வயாவிளான் மத்திய மாவித்தியாலயத்திற்கும், காரைநகர் இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் வித்தியாலயக் கோஷ்டி 9—1 கோல்களால் வெற்றி பெற்றுள்ளது. வசாவிளான் ம. ம. வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. விஜயரத்னசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

(கோண்டாவில்)

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் முறையே முதலாம் மூன்றும் பிரிவுகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி வெற்றிபெற்றது.

முதலாம் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து ஸ்கந்தவரோதயாக் கல்லூரி விளையாடியபோது கொக்குவில் இந்துக்கல்லூரி 3—3 கோல்களால் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை வெற்றி கொண்டது. மூன்றும் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர்த்து யூனியன்விளையாடியதில்கொக்குவில் இந்துக் கல்லூரி 2—1 கோல்களால் யூனியன் கல்லூரியை வெற்றிகொண்டது. (ஈ)

பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற நீர்வேலி வடக்கு குஞ்சர் கணபதி செல்லையா என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

நீர்வேலி வடக்கு குஞ்சர் கணபதி செல்லையா
கைம்பெண் செல்லம்மா
மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 3555

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28-ந் நாளன்று முற்பகல் 10-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20-ந் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது. (412)

கல்விச்சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இந்துக் கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள் ஒரு பயனுள்ள கல்விச்சுற்றுலாவை நேற்று மேற்கொண்டனர்.

கைதடி செவிப்புலன் கட்புலன் இழந்த மாணவர் பாடசாலை, திருநெல்வேலி விவசாயப் பண்ணை, சீமா சில்க் தொழிற்சாலை, மில்க்வைற் தொழிற்சாலை, ஈழநாடு' காரியாலயம் ஓலைத்தொழிற்சாலை, யாழ்ப்பாணக் கோட்டை, நூதனசாலை சுப்பிரமணியம் பூங்கா, மண்டைதீவு உபஅஞ்சல் வானொலி நிலையம் ஆகிய இடங்களை இவர்கள் பார்வையிட்டனர்.

இச்சுற்றுலா ஆசிரியர் சி. தாமோதரம்பிள்ளை தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. (கொ)

நாடும் நடப்பும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கத் தொடங்கியவர்களும் இதில் அடங்கலாம். முன்பு நீலக்கொடி பிடித்துப் பின்னர் பச்சைச் சட்டை போட்டு அதில் எதிர்பார்த்த பலன் கிடைக்காத சிலர் இப்போது மீண்டும் நீலச்சட்டை மாட்டியிருக்கலாம்.

அடுத்து பச்சைக்கொடி காட்டுவதற்குச் சிலர் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். ஆமாம் பிரதமர் பிரேமதாசா விரைவில் யாழ்ப்பாணம் வருகிறார்.

-- **ஊர்சுற்றி**

மின்தறிப்புடவை விற்பனைக்கு

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மின்தறியில் உற்பத்தி செய்யப்பட்ட பின்வரும் (கிறே) துணிகளை விற்பனை செய்வதற்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. பொலியெஸ்ரர் சேட்டிங் 39'' (40 X 40/72X72)- 12 000 மீற்றர்
2. பப்ளின் 39'' (30 X 40/72 X 62) - 4,700 மீற்றர்

மேற்குறிப்பிட்ட துணியை தமது தேவைக்கு ஏற்பக் கொள்வனவு செய்ய விரும்புவோர் ஒரு மீற்றர் துணியின் விலையைக் குறிப்பிட்டு தமது கேள்வியை 3-12-80 முற்பகல் 11 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக சுடித உறையில் புடவைக் கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிட்டு பின்வரும் விலாசத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும். கேள்விப்பத்திர வைப்புப் பணமாக ரூபா 250க்கு காசுக்கட்டளை அல்லது வங்கிக்கட்டளை கேள்விப்பத்திரத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். கேள்விப்பத்திரங்கள் சம்பந்தமாகச் சங்கத்தின் தீர்மானமே முடிவானது ஆகும்

பொதுமுகாமையாளர்,

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்;

பிரதான வீதி, சாவகச்சேரி.

24-11-80. (7447)

காங்கேசன்துறைப் பட்டினசபை
கேள்வி விளம்பரம் - 1981

1981-ம் ஆண்டுக்கான பின்வரும் குத்தகைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 12-12-1980-ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்

		கேள்விப் பிணைப் பணம்	கேள்விப் பத்திரப் பணம்
1.	காங்கேசன்துறைச் சந்தை (மரக்கறி, மீன் கடைகள் உட்பட)	500/-	25/-
2.	காங்கேசன்துறைச் சந்தையிலுள்ள மாட்டிறைச்சிக்கடை	500/-	25/-
3.	மயிலிட்டியில் (ஆறும் வட்டாரம்) உள்ள மாட்டிறைச்சிக் கடை	500/-	25/-

இவ்வலுவலகத்தில் 5-12-1980-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரைக்கும் வழங்கப்படும் கேள்விப்பத்திரங்களிலேயே விண்ணப்பிக்கவேண்டும். கேள்விப்பத்திரப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

க. சண்முகநாதன்,
விசேட ஆணையாளர்,
பட்டினசபை,
காங்கேசன்துறை.

பட்டினசபை
அலுவலகம்,
காங்கேசன்துறை,
25-11-80

7448

சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கொழும்பு செயலக வளவில் இழுக்கப்பட்ட 811-வது தேசிய லொத்தர் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு:
20 M 0881
ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு:
06 U 0277
ரூபா 40,000

மூன்றாவது பரிசு:
26 R 0178
ரூபா 10,000

தலா ரூபா 1,542 கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு:

17 A 0003	23 A 0821
25 A 0383	29 A 0064
09 B 0755	16 B 0231
21 B 0575	02 C 0670
03 C 0309	12 C 0413
22 C 0 63	24 C 0311
31 C 0796	31 C 0968
03 D 0555	05 D 0994
12 D 0641	14 D 0048
27 D 0541	01 E 0091
05 E 0741	03 E 0704
2[illegible] E 0138	28 B 0283
28 E 0394	
32 F 0658	06 F 0520
17 F 09[illegible]8	15 G 0703
18 G 0[illegible]69	18 G 0816
20 G 0403	03 H 0462
11 H 0954	
05 J 0563	21 J 0491
22 J 04[illegible]6	31 J 0566
03 K 0203	05 K 06[illegible]4
07 K 0393	10 K 0979
14 K 0973	03 L 0110
06 L 0421	19 L 0403
23 L 0755	31 L 0084
13 M 0314	24 M 0534
31 M 04[illegible]8	33 M 0698
0[illegible] N 0349	32 N 0962
05 O 0107	17 O 0129
18 O 1000	25 O 0138
04 P 0526	12 P 0946
21 P 0200	06 Q 0390
09 Q 0522	16 Q 0470
23 Q 0978	28 R 0137
33 R 0422	29 S 0135
10 T 0659	14 T 0987
26 T 0733	07 U 0104
10 U 038[illegible]	16 U [illegible]657
23 U 0359	23 U 0947
05 V 0674	06 V 0643
19 V 0190	22 V 0824
14 W 0525	16 W 0075
20 W 0247	21 W 0057
29 W 0306	05 X 0970
19 X 0728	24 X 0388
27 X 0507	33 X 0891
27 X 0065	
05 Y 0306	23 Y 0183
30 Y 0404	07 Z 0677
16 Z 0287	18 Z 0572
21 Z 0201	26 Z 0703
29 Z 0279	

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

நியமனம்

(அரியாலை)

வடபிரதேச விற்பனைத்திணைக்கள பதில் ஆணையாளராக திரு. கணேசானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் வடபிரதேச காணிப்பதிவு இலாகா ஆணையாளராகக் கடமையாற்றியவராவார்.

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் ஒரே ஒரு குமிழ்முனைப் பேனை VINK
யாழ்ப்பாணத்தவர் பெருமைப்படவேண்டிய குமிழ்முனைப் பேனை VINK
யாழ்ப்பாணத்தவர் ஆதரிக்கவேண்டிய குமிழ்முனைப் பேனை VINK
VINK இப்பொழுது எங்கும் கிடைக்கிறது.

மணிவாக்கு

ஞானமே பரம்பொருளின் தன்மை,
எனவே ஞானத்தைப்
பெறு; விடுதலையடை.
—சுவாமி சிவானந்தர்

நமது நோக்கு

இளவரசர் சார்ள்ஸின் இந்திய விஜயம்

இன்று இந்தியாவில் இரண்டுவார சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் தம் முன்னோர் ஆட்சிபுரிந்த பாரத தேசம் ஒரு புண்ணிய பூமியென நேரடியாக அறிவதற்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

அதனைக் கேட்டறிந்த இளவரசர் நேரில்பார்க்கவே வந்திருப்பாரென்பது எமது நம்பிக்கை.

சுதந்திர இந்தியாவின் தேசபிதா, உலகம் கண்ட உத்தம புருஷர்களில் முன்னணி வகிக்கும் மகாத்மா காந்தி பிரிட்டிஷ் ஆட்சியை எவ்வாறு எதிர்த்தார்; இந்தியா எந்தவகையில் சுதந்திரம் அடைந்தது என்பதை இடித்துக் கூறுவதே இன்று பிரிட்டனுக்கும் இந்தியாவுக்குமிடையே நிலவும் நல்லுறவு.

இளவரசரின் பேரனார் ஆறாவது ஜோர்ஜ் மன்னரின் தமையனார் எட்டாம் எட்வார்ட் இளவரசராக இந்தியாவிற்கு உத்தியோகபூர்வமாக வந்தபோது இந்திய சுதந்திர இயக்கம் வீறடைந்திருந்தது. 'பகிஷ்கரி' என்றசொல் எந்தப் பிரிட்டிஷ் இறக்குமதிப் பொருளுக்கும் உபயோகிக்கப்பட்டது. இளவரசர் தானும் அதற்குப் புறம்பாகவில்லை. மிகச் சாதுர்யமான அவர் மக்களோடு அளவளாவி மரியாதையாகத் திரும்பிவிட்டார்.

இந்தியா சுதந்திரம்அடைந்து இன்று 83 ஆண்டுகள் கடந்துவிட்டன. உலகில் எத்தனை மாற்றங்கள்! முடி அரசுகள் பல குடியரசாகிவிட்டன, மரபு சார்ந்த மன்னர் பரம்பரை உலகின் பிரசித்திபெற்ற நாடுகளில் பிரிட்டன் ஒன்றிலேயே காணப்படுகிறது.

வேற்றுநாடுகளை ஆட்சிபுரிந்த பிரிட்டன், அவை எல்லாவற்றுக்கும் சுதந்திரம் வழங்கி, தனக்கொரு முடியாட்சியைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது, ஆங்கில மக்களின் மேலான பண்பாட்டை விளக்குகிறது.

மக்கள் ஆட்சி முறைக்குக் கட்டுப்பட்ட மன்னர் பரம்பரையை உள்ளங் கனிந்த அன்போடு பேணுபவர் ஆங்கில மக்கள். பிரிட்டிஷ் இராணிக்கு இவ்வளவு பணம் அரசு எதற்காகச் செலவு செய்யவேண்டும் என்ற கேள்வியை எழுப்பும் தீவிர சோஷலிஸ்ற் எம். பி. ஒருவர், இராணிக்குச் சுகவீனமென்றதும் பக்கிங்காம் மாளிகைக்கு விரைந்து அவருடை சுகமறிய ஆசைப்படுவது பிரிட்டிஷ் மரபு.

பெருமையுடைய பழமை பாராட்டும் மரபுக்கு இலக்கணமான பிரிட்டன் இந்தியாவிற் புரிந்த அட்டூழியங்கள் பல. இருந்தும் அவர்களுடைய ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்த காந்தி மகான் கைக்கொண்ட சத்தியாக்கிரகமும், அஹிம்சா தர்மமும் இன்று நிலவும் நட்புறவின் இரகசியமாகும்.

நட்புறவின் தன்மை எவ்வாறென்பதை, பத்திரிகையாளர்களின் புனைகதைகள் விளக்கவல்லன. ஒன்று; இளவரசர் ஒரு இந்திய இளவரசியை மணப்பாரென்பது. பாவம் இளவரசர்! காதல் மன்னனாக அவர் இருந்தால், இளவரசிகள் அல்லாத விதம்விதமான அழகிகளை சாதாரண பெண்கள் மத்தியில் காணலாம்; அவ்விதம் அவர் நடந்து கொள்ளவேண்டுமென்று நாம் கருதவில்லை. உறவு உறவென்றாலும்...

நிறவேற்றுமை நிலவ வேண்டுமென்பதையோ, அல்லது அது நிலவுகின்றது என்பதையோ நாம் கருதவில்லை. பிரிட்டனும் இந்தியாவும் சரிநிகர்சமானமான நாடுகள் என்பது உலகறிந்த விடயம். ஆயினும் காலத்துக்குக்காலம் இந்தியர் பிரிட்டனுக்குச் செல்லும் போது சில பாகுபாடுகள் இடம்பெறுவதாகப் பேசப்படுகிறது. அண்மையில் அவ்வித சம்பவம் ஒன்று லண்டனிலுள்ள ஹீத்ரூ விமானநிலையத்தில் நடைபெற்றதை ஒட்டி இந்தியாவில் சில கோஷ்டிகள் இளவரசருக்கு எதிர்ப்புத் தெரிவித்ததாகச் செய்தி.

அது எவ்வாறாயினும், இவ்விரு நாடுகளின் பரஸ்பர அன்பும் நம்பிக்கையும், மற்றைய ஏகாதிபத்தியப் பித்துப்பிடித்து உழலும் நாடுகளுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

தென்ஆபிரிக்காவின் இன ஒதுக்கலில் இன்றும் ஆர்வங் காட்டும் வெள்ளையர் தாய் நாட்டின் நற்பெயரை கெடுக்கும் கோடரிக்காம்புகள்.

இந்திய பொதுத்தேர்தலில் தோல்விகண்ட இந்திரா மனஆறுதலுக்கு இங்கிலாந்து சென்றதும், மவுண்ட்பாட்டன் பிரபுவின் விருந்தினராகவிருந்ததும் நாமறிந்தவை. இளவரசரின் தாயார் பிரிட்டனை ஆளும் ராணியின் திருமணத்திற்கு மவுண்ட்பாட்டன் பிரபு, சுதந்திர இந்தியாவின் சிற்பி மகாத்மாவிடமிருந்து கொண்டுபோன அன்பளிப்பு, காந்தி தன்கையால் நெசவு செய்த மேசை விரிப்பு அதனை எவ்வளவு மதிப்புடன் ராணி ஏற்றுக்கொண்டாரென்பது இளவரசர் கற்றபாடமாயிருக்கும்.

போட்டியும், பூசலும், பொறாமையும் நாடுகளுக்குள்ளே, நாடுகளுக்கிடையே வளர்ந்து வரும் இந்நாளில் இவ்வித [illegible] பாலைவனத்தில் பசுந்தரை போன்றது.

"தமிழ் ஈழத்தை ஐ. நா. அங்கீகரிக்க வேண்டும்!"

அமெரிக்க புகைப்படக் கண்காட்சியை ஆரம்பித்துவைத்து யாழ். மேயர் உரை

(யாழ்ப்பாணம்)

'ஆறுகோடி தமிழ் மக்கள் தமக்கென ஒருநாடு இல்லாது இருக்கிறார்கள். அதேதொகையைக்கொண்ட அரபுக்களுக்கோ பலநாடுகள் உண்டு. அப்படியிருக்க பலஸ்தீன அரபுக்கள் பலஸ்தீனத்துக்காகப் போராடுகிறார்கள். அந்தக் கோரிக்கையை ஐக்கியநாடுகள் சபையே அங்கீகரித்துள்ளது. அப்படியிருக்கும்போது ஏன் தமிழ்மக்களுக்கு என்று ஒரு தாயகம் வேண்டுமென்பதை அச்சபை ஏற்றுக்கொள்ளக் கூடாது?'

யாழ் நகரில் அமெரிக்க தூதுவராலயத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு அமெரிக்க தூதுவர் திரு. டொனல் ருசெயினினால் திறந்துவைக்கப்பட்ட புகைப்படங்கள் காட்சிக்குத் தலைமை தாங்கிப் பேசிய யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

இப்புகைப்படக் கண்காட்சி யாழ். பொதுசன நூலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அமெரிக்கப் புகைப்படக்காரரான திரு. ஸ்ரீபன்பெல்ஸினால் உலகின் பலநாடுகளில் பிடிக்கப்பட்ட கலைநுணுக்கம் நிறைந்த பல புகைப்படங்கள் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இவ்வைபவத்தில் வடபிராந்திய பொலிஸ் மாஅதிபர், நீதிபதிகள், சட்டத்தரணிகள், டாக்டர்கள், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேராசிரியர்கள், உயர் அதிகாரிகள், யாழ். மாநகரசபை ஆணையாளர், உறுப்பினர்கள், கலைஞர்கள் உட்பட மற்றும் பலரும் கலந்துகொண்டனர். முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது;

"புராதன நாகரீகங்கள் இன்றும் போற்றப்படுகின்றன; மதிக்கப்படுகின்றன. பண்டைய நாகரீகங்கள் யாவும் உலக நாகரீகங்களாகப் போற்றப்படுகின்ற காரணத்தினால் போலும், பண்டைய நாகரீகங்களுக்குச் சொந்தம் கொண்டாடக்கூடிய நாடுகள் மீண்டும் விழிப்படைந்து, எழுச்சிபெற்று உலகப்படத்திலே திரும்பவும் சுதந்திர நாடுகளாக மறுமலர்ச்சிபெற முடிந்தது. திராவிட நாகரீகம்மட்டுமே அதற்கு விதிவிலக்காகவுள்ளது. அதனால்தான் திராவிட நாகரீகத்துக்குச் சொந்தக்காரரான இனங்களும் சிறப்பாகத் தமிழ் மக்கள் தமக்கென ஒரு சுதந்திரநாடு இல்லாத நாடற்ற இனமாக இருப்பதை வெறுக்கின்றார்கள். உலகில் உள்ள ஆறுகோடி தமிழர்களுக்கும் ஒரு சொந்தநாடுவேண்டாமா?

கட்சிக்குக் கூடு உண்டு நரிக்குக் குழிஉண்டு...

"கூடு உண்டு பட்சிக்கு; குழி உண்டு நரிக்கு; மனிதனான தமிழனுக்கோ தலைசாய்க்க இடமில்லை! வனவிலங்குகள், பட்சிகள் இனமழியாது காப்பாற்றப்படவேண்டுமென்பதற்காக பட்சிகளுக்கும் விலங்குகளுக்காகவும் தேசிய வனங்களை ஏற்படுத்துகிறோம். அதில் அவை சுதந்திரமாக வாழ வழிவகை காணுகிறோம். உலகத் தமிழனுக்கு ஒரு தாயகம் குறைந்தபட்சம் ஒரு தேசிய இல்லமாவது வேண்டாமா?

குடியேற்றத் திட்டங்கள் மூலம் தமிழர்கள் நிலம் பறிபோகிறது, தனது சொந்த மரபுவழித் தாயகத்திலேயே ஈழத்தில் தமிழன் சிறுபான்மையாக்கப்படுவதை உலகம் சகித்துக்கொள்ளலாமா? அதனால்தான் சிங்களக் குடியேற்றங்களை நாம் ஆட்சேபிக்கிறோம். இத்தீவு சுதந்திரம் பெற்றபின் நடைபெற்ற குடியேற்றங்கள் கலைக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். முன்பு குடியேற்ற நாடுகளாக இருந்துவந்த நாடுகளில் அந்நிய குடியேற்றங்கள் கலைக்கப்படும்போது குறைந்தபட்சம் எமது மரபுவழித் தாயகத்திலாவது தமிழ்ப்பண்பாடு, திராவிடப் பண்பாடு பேணப்பட அது அவசியம் இல்லையா?

"அமெரிக்க மிஷனறிமார் பன்னெடுங்காலத்திற்கு முன்னரே யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர். அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிகளும், கிறிஸ்தவ ஆலயங்களும், மருத்துவ மனைகளும் இன்றும் இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது. அமெரிக்கர் யாழ்ப்பாணத்திற்கு வந்து கல்லூரிகளை ஆரம்பித்ததால் இங்கு ஆங்கிலக்கல்வி வளர்ச்சியடைந்துள்ளது. அதேபோல் ஆங்கில மருத்துவ மனைகளை அமைத்து ஏழை எளிய மக்களுக்கு இலவச வைத்தியமும் செய்துவந்தனர்.

"அமெரிக்காவில் இருந்து வந்த டாக்டர் கிறீனினால் ஆரம்பிக்கப்பட்டதுதான் மானிப்பாய் மருத்துவமனை. அம்மருத்துவமனைமூலம் பல வறிய குடும்பத்தினர் பயனடைந்தனர்.

"இந்தியாவிலுள்ள வேலூர் மருத்துவக் கல்லூரி போன்ற ஒரு மருத்துவக் கல்லூரியை மானிப்பாயில் ஆரம்பிக்க டாக்டர் கிறீன் திட்டமிட்டிருந்தார். இது சம்பந்தமாக அமெரிக்காவிற்குச் சென்ற அவர் துரதிர்ஷ்டவசமாகத் திரும்பி வரமுடியாதநிலை ஏற்பட்டது. அம்மருத்துவக்கல்லூரி மானிப்பாயில் ஆரம்பிக்கப்பட்டிருந்தால்அதுவேஇலங்கையின் முதலாவது மருத்துவக் கல்லூரியாகும். மெரிக்கர்களுடன் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டதொடர்பைஇங் இப்பொழுதுஆரம்பிக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சி மேலும் வளர்ச்சியடையச் செய்யட்டும்" என்றார்.

(கொ)

மக்கள் கருத்து

வட்டு. பொது நூல் நிலையம்

வட்டுக்கோட்டை பொது நூல்நிலையம் அரசாங்க பொது விடுமுறை நாட்களிலும், போயா நாட்களிலும் திறக்கப்படவேண்டுமென்று முன்பு ஒருதடவை 'ஈழநாடு' பத்திரிகையின் மக்கள்கருத்துப் பகுதியில் சுட்டிக் காட்டியிருந்தும், அதுகுறித்து இதுவரை நடவடிக்கைகள் எதையும் வட்டுக்கோட்டை கிராமசபையின் விசேட ஆணையாளர் எடுக்காதது குறித்து இக்கிராமசபையின்வரியிறுப்போர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

பொதுவிடுமுறை தினங்களிலும், போயா தினங்களிலும் இந்நூல்நிலையம் மூடியிருப்பதனால் வாசகர்கள் பத்திரிகைகளையோ, சஞ்சிகைகளையோ வாசிக்கமுடியாது சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். பொதுவான விடுமுறை தினங்களிலேயே உத்தியோகஸ்தர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசிப்பதற்கு கூடுதலான நேரம் கிடைக்கிறது. எனவே இத்தினங்களில் இந்நூல்நிலையத்தை திறந்து வரியிறுப்பாளர்கள் விடுமுறை நாட்களிலும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் படிப்பதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுக்க இக்கிராமசபையின் விசேடஆணையாளர் இம்முறையாவது நடவடிக்கை எடுப்பாரா?

—தி. வெற்றிவேலுப்பிள்ளை
வட்டுக்கோட்டை.

நாடும் நடப்பும்....

திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பிரதம மந்திரியாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தபோது பொதுமக்கள் அவருக்குச் சிறிது தூரத்தில் கூட நிற்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு அவர் சென்றபோது ஆலயத்துக்கு கால் மைல் தூரத்தில் தடுப்புப் போட்டு பொதுமக்கள் தடுத்து வைக்கப்பட்டனர்.

முதலாவதுபெண் பிரதமரை ஒருதடவை பார்த்துவிட வேண்டுமென்ற ஆசையில் பெருந்தொகையான பெண்கள் நல்லூர்க் கோயிலை நோக்கிவந்தபோதும் அவர்கள் வெகுதூரத்திலேயே தடுத்து வைக்கப்பட்டனர்.

கோயில் வீதியை அடுத்து வசிக்கும் வயது தாண்டிய இரண்டு பெண்கள் நெற்றியில் குறிதுலங்க எப்படியோ கோயில் வாசல்வரை வந்துவிட்டார்கள். உடனே இரண்டு பொலிஸ்காரர் அவர்களை உள்ளே செல்லவிடாது தடுத்துத் திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

திருமதி சிறிமாவும் அவரது பரிவாரங்களும் பொலிஸ்காரர்களும் பத்திரிகை நிருபர்களும் தான் நல்லூரில் சிலமணிநேரம் ஆக்கிரமித்திருந்தனர்.

பிரதமருக்குப் பாதுகாப்பு என்ற காரணத்தால் அப்பொழுது பொதுமக்கள் எவரும் திருமதி சிறிமாவுக்குக் கிட்ட எட்டவும் முடியாதிருந்தது.

இம்முறை திருமதி சிறிமா சாதாரண பிரஜையாக வந்திருந்தார். பொதுமக்கள் மிக அருகில் செல்லவும் வாய்ப்பிருந்தது. என்றாலும் அவரது கட்சியைச் சேர்ந்தவர்களும் அவருடன் வந்த பொடிகார்டுகளும் பொதுமக்களை எட்ட நிறுத்தாது அவரது பாதுகாப்பில் கவனமாகத் தானிருந்தார்கள்.

பொதுமக்களை மிகநெருக்கமாகப்பார்க்கவும் சந்தித்துப் பேசவும் சந்தர்ப்பம் கிடைத்ததால்தான் வடபகுதி தமிழ் பொதுமக்களைப்பற்றி உயர்ந்த எண்ணம் இப்போது திருமதி சிறிமாவுக்கு ஏற்பட்டிருக்கிறது.

பொதுமக்களை நெருங்கவிடாமல் பொலிசார் முன்னர் தடையாக இருந்ததால் பொதுமக்களை திருமதி சிறிமா அப்போது அறிந்து கொள்ள முடியாமலிருந்தது.

இதே போல் அன்று அம்மையாரைச் சூழ இருந்தவர்கள் தமிழ்த்தலைவர்களைச் சந்தித்துப்பேச விடவில்லை. அதனால் அவர்களைப்பற்றித்தெரிந்துகொள்ள இயலவில்லை. இன்று அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதால் அவர்களைப் புரிந்து கொண்டிருப்பது மட்டுமல்லாமல் தமிழ்தலைவர்கள் தமிழ்கட்சிகள், தமிழ் மக்கள் ஆகிய அனைவரையும் புரிந்து கொண்டிருக்கிறார்.

தமிழர்விடுதலைக் கூட்டணியின் ஆறுஅம்ச மகஜரை தந்தைசெல்வா பிரதமர் திருமதி சிறிமா மண்டாரநாயகாவுக்கு அனுப்பி வைத்து அதுசம்பந்தமாக நிலைமையை விளக்குவதற்கு நேரில் சந்தித்துப்பேசுவதற்குக் கூட்டணி தயாராக இருக்கிறதென்று தெரிவித்திருந்த சமயத்திலேயே அம்மையார் தமிழ்த் தலைவர்களை அழைத்துக்கலந்து பேசியிருந்தால் இன்று நிலைமை வேறாக இருக்கக்கூடும்!

* *

சிறிமா அம்மையார் வந்தபோது நீலக்கொடிகள் பறந்தன. "அடுத்தது அம்மையாரின் ஆட்சிதான்; இப்போதே கொடிபிடித்து வைத்தால் பயன் கிடைக்காமலா போகப்போகுது" என்று கொடிபிடிக்

(2ம்பக்கம் பார்க்க)

அசாமில் கிளர்ச்சி, வன்முறைகளை தடுக்க கடும்நடவடிக்கை

அரசு அறிவிப்பு

கௌகாத்தி, நவ. 26

மறியல் மற்றும் கிளர்ச்சி நடவடிக்கைகளின் பேரால் வன்முறைகள் ஏற்படுவதைத் தடைசெய்வதற்கு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாக அசாம் அரசு அறிவித்துள்ளது. அதேவேளை அசாமின் வடகிழக்குப் பிராந்தியத்தில்சீர்குலைந்துள்ள பொருளாதார நிலையை மீண்டும் கட்டியெழுப்ப அப்பிராந்தியத்தில் அமைதியையும், நல்லெண்ணத்தையும் பேணுமாறு அனைத்து அசாம் சிறுபான்மையினர் மாணவர் சங்கம் எல்லா இன மக்களையும் கேட்டுள்ளது.

இச்சங்கத்தின் தூதுக்குழுவொன்று பிரதமமந்திரி இந்திராகாந்தி, மத்தியஉள்துறை அமைச்சர் திரு. ஸயில்சிங், வெளிநாட்டமைச்சா திரு நரசிம்மராவ் ஆகியோரைச் சந்தித்து அசாமின் தற்போதைய நிலைமை குறித்து எடுத்துரைத்ததாகக் கூறப்படுகிறது.

அசாமின் நீண்டகாலப் பிரச்னையைத் தீர்க்காமல் அம்மாநிலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை மத்தியஅரசு பதவியில் அமர்த்த முயல்வது சரியானநடவடிக்கையல்லவென்று அசாமின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 6 பேர் தெரிவித்துள்ளார்கள் இந் நடவடிக்கை அசாமில் கிளர்ச்சி, வன்முறைகளை மேலும் அதிகரிக்கச்செய்யுமென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (வெ)

சட்டம்

புதுடில்லி, நவ. 26

கேரள அரசு மாநிலக் கடலோரத்தில் மீன்பிடிப் படகுகளை முறைப்படுத்தும் சட்டமொன்றை அமுல்படுத்தியுள்ளது.

இத்தகைய சட்டம் இந்தியாவிலே இம் மாநிலத்தில் தான் முதன்முதல் கொண்டுவரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (வெ)

நாளை கிறிஸ்மஸ்: விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய கிறிஸ்மஸ் விழா, நாளை வெள்ளிக்கிழமை மாலை, மேற்படி கல்லூரி மண்டபத்தில் திரு. அ. இ. வ. தேவகுலசூரியர் தலைமையில் நடைபெறவுள்ளது

இவ்விழாவில் பிரதமவிருந்தினராக வணக்கத்திற்குரிய அ. சிங்கராயர் அடிகளார் கலந்துகொள்வார்.

விழாவில் நடகம், நடனம், கரோல் ஆகிய கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

"வன்முறையில் ஈடுபடாது அமைதியான வழிகளில்பிரச்னைகளைத் தீர்க்கவும்"

தமிழ்நாடு முதலமைச்சர் வேண்டுகோள்

சென்னை, நவ. 26

"நாட்டின் சுதந்திரத்தையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாதது வலுப்படுத்துவதற்கு மக்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயலாற்றவேண்டும்"

மேற்கண்டவாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் சென்னையில் நடைபெற்ற தேசியஒருமைப் பாட்டுவாரக்கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: "மக்கள் வன்முறையில் ஈடுபடக்கூடாது. மதம், பொருளாதார, அரசியல்வேறுபாடுகளையும், குறைபாடுகளையும், வேற்றுமைகளையும் அரசியல்சாசன வரம்பிற்கமைய அமைதியானவழிகளில் மக்கள் தீர்த்துக்கொள்ளவேண்டும்" என்றார். (வெ)

பஸ் விபத்து 19 பேர் பலி!

புதுல்லி, நவ. 26

மத்தியபிரதேசத்தில் டில்லி போக்குவரத்துக்கழக பஸ் ஒன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 19பேர் பலியானர்கள், 69 பேர் காயமடைர்தனர்.

ஆந்திரா - பம்பாய் சாலையில் இவ்விபத்து ஏற்பட்டது. இவ்விபத்திஞல் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவித்தொகையை வழங்க டில்லி போக்குவரத்துக்கழகம் முன்வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சர் திரு.வீரேந்திரபட்டேல் இவ் விபத்துக் குறித்து அதிர்ச்சியையும், இதஞல் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குஆழ்ந்த அனுதாபத்தையும்தெரிவித்துள்ளார். (வெ)

"நாட்டின் நலனைமுன்னிட்டு மக்கள் தியாகம் செய்யவேண்டும்"

பிரதமர் இந்திரா கோரிக்கை

புதுடில்லி, நவ. 26

"நாட்டின் வருங்காலநலனை முன்னிட்டு தமது சொந்த நலன்களை சிலசமயங்களில் தியாகம்செய்வதற்கு மக்கள் தயாராக இருக்கவேண்டும்"

மேற்கண்டவாறு இந்திய பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி புதுடில்லியில் ஜவஹர்லால்நேரு புலமைப்பரிசில் பெற்றவர்கள் முன்னிலையில் உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: "தியாகம்செய்யாமல் எந்த நாடும் உருவானதில்லை. நாம் நம்பிக்கைகொண்டிருக்க வேண்டும். எமது குறிக்கோளை அடையும்வரை ஒய்ந்திருக்கவியலாது. ஜவஹர்லால் நேருவை நினைவில் நிறுத்தி, அவரின் இலட்சியங்களைப் பரப்பவேண்டும். எந்தப் பிரிவினரையும் ஒடுக்க அரசு விரும்பவில்லை. இன்றைய பிரச்னைகளைத் தீர்க்க மக்களின் ஒத்துழைப்புணர்வு தேவைப்படுகிறது" என்றர். (வெ)

பத்திரிகையாளர் சந்திப்பு

இவர்களும் கலந்து கொண்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் நடைபெற்ற சீனப்பத்திரியைாளர்கள்இலங்கைப்பத்திரிகையாளர்கள் சந்திப்பின்போது இலங்கைத் தேசியப் பத்திரிகையார்களுடன் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) பத்திரிகையான "செம்பதாகை" "றெட்பனர்" ஆகியவற்றின் சார்பில் திரு. கே. தணிகாசலம், திரு. வி. வன்னியசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டு தமது கருத்தைத் தெரிவித்தனர்,

யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும்யாழ். அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் மேற்படி இச் சந்திப்பு இடம்பெற்றது. (கொ)

தந்தை கொலை தொடர்பாக

ரிமாண்டிலிருந்த மகனுக்கு பிணையில்செல்ல அனுமதி

(மாவிட்டபுரம்)

தந்தை கொலை செய்யப்பட்டது தொடர்பாக கைதாகி ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரான தனயன் 2500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

பலாலி மத்தியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை கந்தையா என்பவரை பொல்லால் அடித்துக் கொலைசெய்த சம்பவம் ஒன்று தொடர்பாக அவரது மகனை கந்தையா வேலுப்பிள்ளை என்பவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்த காங்கேசன்துறைப் பொலிசார் இவரை மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்தபோது அவர் ரிமாண்டில் வைக்கப்பட்டார்.

இந்நபர் மல்லாலகம் நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் ஆஜர் செய்யப்பட்டபோது இவரைப் பிணையில் விடுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை உயர் நீதிமன்றம் ஏற்று பிணையில் விட அனுமதித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து நீதிபதி திரு. சி. ஆர். இராஜசிங்கம் சந்தேக நபரை 2500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

வாரத்தில் இரு தினங்கள் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்திற்கு சமூகமளிக்க வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டது. (க)

கல்வித்திணைக்கள

கடனுதவிச் சங்கம் நடவடிக்கை

(உடுப்பிட்டி)

கல்வித்திணைக்கள ஊழியர்களின் ஒய்வூதிய மரணப் பணிக்கொடைத் திட்டமொன்றைச் செயல்படுத்த கல்வித் திணைக்கள ஊழியர்களின் யட்டுப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சிக்கன கடனுதவிச் சங்கம் முடிவு செய்துள்ளது.

பல வருடங்கள் சேவையின் பின் இளைப்பாறும் கல்வித் திணைக்களப் பணியாளர்கள் அவர்களுக்குச் சேரமதியான ஒய்வூதியம் வழங்கப்படு முன் பல மாதங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது என்றும் ஏனைய அரசாங்க நிலையங்களைச் சேர்ந்த வேலையாளர்களுக்கு அவர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ள நலன்புரிச் சங்கங்களிலிருந்து அவர்கள் இளைப்பாறிய உடனேயே சில நலன்களைப் பெறுவதற்கான வசதிகள் இருப்பினும் கல்வித் திணைக்கள ஊழியாகளின் நலனுக்காக அத்தகைய எவ்வித நலன்புரிச் சங்கமும் நிறுவப்பட்டு இருக்கவில்லை என்றும் இதனாலேயே ஒய்வூதியம் மரணப்பணிக் கொடை ஆகியவற்றை வழங்குதற்கான இத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்குத் தீர்மாளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது,

உறுப்பினர்கள் சேவையிலிருந்து இளைப்பாறும் நேரம் அல்லது எதிர்பாராத யாதேனும் இடுக்கண் அவர்களுக்கு நேரிடும்போது அவர்களில் தங்கியிருப்போருக்கு நலன்களை ஏற்பாடு செய்தலையே இத் திட்டம் நோக்கமாசக் கொண்டுள்ளது எனினும் இக் கருத்துடன் திட்டமிடப்பட்டுள்ளதும் சங்க விசேட பொதுக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான ஒய்வூதியம் மரணப் பணிக்கொடை சம்பந்தமான இத்திட்டத்தை 1981ம் ஆண்டிலிருந்து செயற்படுத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

பலாலிஆசிரிய பயிற்சி

கலாசாலையில்சித்திவிநாயகர் ஆலயம்

(பலாலி)

பலாலி ஆசிரிய கலாசாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சித்திவிநாயகர் ஆலய பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. பிரதிஷ்டா குரு சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக் குருக்கள் விநாயககர் சிலையை பிரதிஷ்டை செய்து வைத்தார்.

அருள்மிகு சித்திவிநாயகர் சிலை யாழ் நகரில் இருந்து பவனியாக எடுத்து வரப்பட்டபொழுது வழி நெடுகிலும் பூரண கும்பம் வைத்து விநாயகர் வழிபாடு நடாத்தப்பட்டது.

கலாசாலை அதிபர் திரு. ஈ. கனகலிங்கம் எடுத்த தீவிர முயற்சியாலேயே இவ் ஆலயம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிகிறது.

இதுவரை காலமும் இந்து ஆலயம் ஒன்று இக்கலாசாலையில் இல்லாதகுறை இதன் மூலம் நீங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஈ)

35 வீடுகளில் திருத்த வேலைகள்

(நெல்லியடி)

யாழ். மாவட்டத்திலிருந்து நவீன கிராமமாக தெரிவுசெய்யப்பட்டு நிர்மாண வேலைகள் நடைபெற்று பூர்த்தியடையும் நிலையிலுள்ள கன்பொல்லை மாதிரிக் கிராமத்தில் 35 வீடுகளின் அத்திபாரங்கள் திருத்தப்படுகின்றன.

இந்த 35 வீடுகளின் அத்திபாரங்கள் சரிவரஅமைக்கப்படவில்லையென கொழும்பிலிருந்து வர்த வீடமைப்பு நிர்மாண அமைச்சு உயரதிகாரிகள் பிரதமருக்குசெய்துகொண்ட புகாரினை அடுத்து, இத்திருத்த வேலைகள் நடைபெறுகின்றன. (க)

கல்வித் திட்டத்தை பார்வையிட்டனர்

(மாவிட்டபுரம்)

சுவீடன் சர்வதேச அபிவிருத்தி நிறுவன பிரதிநிதி திருமதி ஒஸ்ரான்ட் சுவீடனிலிருந்து இங்கு விஜயம் செய்துள்ளார்.

சுவீடன் நாட்டு உதவியுடன் இங்கு மேற்கொள்ளப்படும் மகளிர், பாவனையாளர் தகவல் கல்வித்திட்டத்தை பார்வையிட்டு ஆராயுமுகமாக இவர் இங்கு வந்துள்ளார்.

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மேற்படி திட்டத்தை சுவீடன் நிதிஉதவியுடன் நடைமுறைப்படுத்தி வருவதால் இச்சங்கத்திற்கு விஜயம்செய்து திட்டத்தின் செயல்பாட்டை ஆராய்ந்தார். இவருடன் கேகாலை மாவட்ட தேசிய கூட்டுறவுச் சபைத்-தலைவி திருமதி அனுரா உதாகம முன்னுள் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. பி வீரமன் ஆகியோரும் வந்திருந்தனர். (க)

முதலுதவிப் பயிற்சியில்

கிளிநொச்சி சென்திரேசா மாணவிகள் 33 பேர் சித்தி

(டிரந்நன்)

கிளிநொச்சிப் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிச் சிகிச்சையில் பயிற்றப்பட்ட சென். திரேசா மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 33 மாணவிகள் சித்தியெய்தினர். சித்தி எய்திய மாணவிகளுக்குக் கல்லூரி அதிபர் செல்வி ராதா சோமசுந்தரம் தலைமையில் நடந்த வைபவத்தில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரதேச ஆணையாளர் டாக்டர் ஈ. பி. இராசையாவும், மாவட்ட ஆணையாளர் டாடர் சுகந்தன் இன்னுசித்தம்பியும் கலந்துகொண்டனர். கல்லூரி மாணவிகளின் நடனம், முதலுதவிப்போட்டி முதலிய கதம்ப நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (அ)

சதிப்புரட்சி

லண்டன் நவ. 26

அப்பர் மோல்டாவின் அரசாங்கம் இராணுவசதிப் புரட்சியின் மூலம் கவிழ்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்க நாடுகளில் அப்பர்மோல்டாவில்மட்டுமே ஜனநாயக ஆட்சி நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கது.

சேவைக்காலப் பயிற்சி

(புளியங்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறும் வகுப்புத் தொடக்கம் க. பொ. த. சாதாரண வகுப்பு வரை தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி வகுப்பு முல்லைத்தீவு ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் மாங்குளம் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. மு. சிவானந்தம் தலைமையில் நடைபெற்றது.

இதில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையைச் சேர்ந்த விரிவுரையாளர்களான திரு இ. முருகையா வித்துவான் திரு. எஸ். குமாரசாமி, பண்டிதர் திரு சு. க. சிவரத்தினம் ஆகியோர் பங்குபற்றிக் கருத்துரை வழங்கினர்கள்.

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4 45, 7-15 & 9-30
Black Sunday

இன்று மட்டும்
ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)
From 28-11-80
Dr. ZHIVAGO
(Winner of 6 Academy awards)

வெற்றி முழக்கமிடும் 8-வது வாரம்
ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின்
இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
பி எஸ் வீரப்பா-நம்பியார் நடித்த
மீனவ நண்பன்

ராஜா (யாழ்ப்பாணம்)
இன்று மட்டும் (தினசரி 4 காட்சிகள்)
ஜெய்சங்கர்-ஜெய்சித்திரா
அசோகன்
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)
கதை, வசனம்—கருணாநிதி

வின்ஸர் (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15, & 9-30
முத்துராமன் - ஜெயலலிதா-எம்.ஆர். ஆர். வாசு
நடித்த
சூரிய காந்தி

SANTHI Jaffna - 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30
★ SIDNEY POITIER
★ MICHAEL CAINE in
"The Wilby Conspiracy"
Action - Suspense - Thriller - Color
Await! "THE DIRTY DOZEN"

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜனத்திரள் நிறைந்த 2வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30 & 9-45
மூன்று மணித்தியாலங்கள் அமெரிக்காவைச் சுற்றி வலம்வருவதற்கு ரசிகர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
மக்கள் கலைஞர் ★ ஜெய்சங்கர் ★ சீமா ★ புன்னகை அரசி கே. ஆர். விஜயா
நாட்டியப் பேரொளி பத்மினி ★ வி. கே. ராமசாமி ★ மனோரமா
விதுபாலா ★ ரீனா ★ அமெரிக்க நடிகர்கள் ஜோ ஆலபரட் ★ மார்ஷல்
மற்றும் பலர் ஜொலிக்கும்
ஒரே வானம் ஒரே பூமி
(வண்ணக்கலர்)
இந்திய திரைப்பட வரலாற்றில் இதுவரை இடம்பெற்றிராத முதன் முதலாக முழுக்க முழுக்க அமெரிக்காவில் எடுக்கப்பட்ட வண்ணத் திரையோவியம்.
ஆங்கிலப் படங்களை மிஞ்சும்வகையில் அமைந்த விறுவிறுப்பான காட்சிகள் நிறைந்த படம்.
சண்டைப்பட ரசிகர்களுக்கு இனிமேல் எத் [illegible] பயங்கரச் சண்டைகள், மோட்டார் சைக்கிள், கார் [illegible] நிறைந்த படம்.

கரவெட்டி ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரம அனாதை இல்லத்தில் பருத்தித்துறை லயன்ஸ் சழகம் அண்மையில் ''சுவான்சி மரவேலைப்பகுதி'' யொன்றை தொடக்கி வைத்துள்ளது. இம் மரவேலைப்பகுதியை மேற்படி சழகத்தின் முதல் தலைவர் திரு. அ. சோமசுந்தரம்பிள்ளை தொடக்கி வைப்பதை இங்கு காணலாம். (படம்—குகன்ஸ்)

மத்திய கல்லூரி, மகாஜனா வெற்றி

(கோண்டாவில்)

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இரண்டாம், மூன்றாம் பிரிவுகளுக்கான உதைபந்தாட்டப் போட்டிகளில் முறையே யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஆகியவை வெற்றிபெற்றன.

இரண்டாம் பிரிவில், யாழ். மத்திய கல்லூரிக்கும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் இரு சாராரும் தலா இரண்டு கோல்களைப் பெற்றதனால் ஆட்டம் விறுவிறுப்பாக நடைபெற்று 'பனல்டி' மூலம் யாழ்.மத்திய கல்லூரி வெற்றி பெற்றது. மூன்றாம் பிரிவில் மத்திய கல்லூரியும் மகாஜனக் கல்லூரியும் விளையாடியதில் மகாஜனக் கல்லூரி 2—1 கோல்களால் வெற்றியீட்டியது.

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி-ஞாயிறு 2-45
ஞானக்குழந்தை

2-வது வாரம்
வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
அந்தமான் காதலி
(கலர்-புதிய பிரதி)

ஹரன் யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-விஜயகுமாரி
மனைவி

யாழ். பாடசாலை வி. சங்க

அரை இறுதிப்போட்டி இன்றைய ஆட்டங்கள்

(பலாலி)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடாத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சுற்றுப் போட்டியின் 3-ம், 1-ம் பிரிவு ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன. 3-ம் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி போட்டியிடும். 1-ம் பிரிவுப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி போட்டியிடும். இப்போட்டிகளில் தெரிவு செய்யப்படும் கோஷ்டிகள் சாம்பியன் போட்டிகளில் கலந்துகொள்ளும்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இப்போட்டிகள் நொக்-அவுட்முறையில் இடம் பெறும்.

வயாவிளான் ம.ம.வி.-நடேஸ்வரா மோதல்

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுபபோட்டியின் அரை இறுதியாட்டத்தில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் நாளைய தினம் மோதிக்கொள்ளும். இப்போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (ச)

இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 12-ந் திகதி
வியாழக்கிழமை
(27-11-80)

மேடம்- தங்கக்குணம் மேலிடும். தக்க மதிப்பும் கிடைக்கும். இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும். உழைப்பினால் பயனும் உற்சாகமும் பிறக்கும்.

இடபம்- கைநிறையப்பணம் தாராளமாகக் கிடைக்கும். புதியவிருந்தினர்கள் உங்களைத் தேடிவருவார்கள். தொழில் துறையில் இடமாற்றமும் ஏற்படலாம்.

மிதுனம்- துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். உறங்கிக் கிடந்த பகை மீண்டும் தலைதூக்க ஆரம்பிக்கும். ஆடம்பரப்போக்கினால் கடன்படநேரிடலாம்.

கடகம்- எதிலும்நிச்சயமற்ற நிலையால் வேதனைப்படுவீர்கள். சிறிய விடயத்திற்குக்கூட அதிக ஆத்திரப்படுவீர்கள். மற்றவர்களின் குறுக்குவழித் தலையீடும் இடம்பெறும்.

சிங்கம்- இனியவார்த்தைகளின் மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள். பொருள்வரவிற்கும் இடமுண்டு. சுற்றாடலில் மதிப்பு உயரும். இறை அருளும் உண்டு.

கன்னி- சிந்தனை அலைகள் சீறிப்பாயும் எதற்கெடுத்தாலும் ஆத்திரப்படுவீர்கள். மூத்த சகோதரத்தின் உடல்நலம் பாதிக்கப்படலாம். எதிலும் பொறுமையுணர்ச்சியுடன் இருக்கவும்.

துலாம்- இன்று வாகன சாரதிகளுக்கு வளமான திருப்பம் ஏற்படும் பெரியோர்களின் ஆசிகிடைக்கும். பொருளாதாரத்துறையில் முன்னேற்றம் காணப்படும்.

விருச்சிகம்- சமூகத்தில் அந்தஸ்துஉயர்வதற்கு இடமுண்டு பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையைத் தேடித்தரும். ஸ்தல யாத்திரையொன்றும் மேற்கொள்ளப்படலாம்.

தனுசு- ஏமாந்த நேரத்தில் உங்களை வீழ்த்தி விடுவதற்குச் சிலர் திட்டம் போடுவார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் விழிப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளவும்.

மகரம்- கண்ணியமான காரியங்களை முடிப்பதில் வெற்றி காண்பீர்கள். காதல் சிட்டுக்களுக்கு இன்று தேன் சொட்டும் தினம். எதிர்ப்புக்கள் மறைவதற்கும் இடம் உண்டு.

கும்பம்- பணத்தைக் கொடுத்து பகையைச் சம்பாதித்துக் கொள்வீர்கள். தொழில் துறையில் சோர்வு தென்படும். நிதான புத்தியுடனும் அதிக ஆலோசனையுடனும் நடக்கவும்.

மீனம்: தந்தை வழி ஆதரவு தவறாமல் கிடைக்கும். தடைகள் யாவும் தவிடுபொடியாகும். இனபந்துக்களின் கொண்டாட்டத்திற்கும் இடமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

மேலதிக வருமானம்

(நெல்லியடி)

முன்னைநாள் பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா யாழ். நகருக்குவிஜயம் செய்த கடந்த 22ம் திகதி பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவிற்கு சுமார் 8 ஆயிரம் ரூபா மேலதிக வருமானம் கிடைத்துள்ளது.

விசேட பஸ் சேவைகள் நடைபெறுதலிடத்தும், சாதாரண பஸ்சேவை மூலம் இம் மேலதிக வருமானம் கிடைக்கப்பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். (க)

கொழும்புக்கும்
யாழ்ப்பாணத்திற்குமான
துரித சேவை
யாழ்ப்பாண மக்களின்
பாரம்பரியத்துக்கு ஏற்ற வகையில்
அன்பையும்
பண்பையும் வழங்கும்
குளிரூட்டப்பட்ட சேவை
வாசன்ஸ் சுப்பர் ரவல் சேவை
ஆசனப்பதிவு:
அசோக் பவான்
112, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8095

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்

ஷார்ப் போட்டோ
கொப்பியிங் சேர்விஸ்
(COPYING SERVICE)
சகலவிதமான அச்சு
மற்றும் கையெழுத்துப்
பத்திரங்களைக்
குறைந்த செலவில் குறுகியநேரத்தில்
இறக்குமதி செய்யப்பட்ட
காகிதத்தில் போட்டோ
பிரதி செய்துகொடுக்கப்படும்.
SHARP PHOTO
10. கே. கே. எஸ். வீதி
சுன்னாகம்.
(சுன்னாகம் மக்கள் வங்கிக்கு
முன்பாக)

மாவனல்லை எம். பி. பதவி ஏற்றார்

(கொழும்பு)
புதிதாக நியமனம் பெற்ற மாவனல்லை எம். பி. திரு. சந்திரதாச ரணதுங்க நேற்று பாராளுமன்றத்தில் சபாநாயகர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

திரு. ரணதுங்க பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தின் போது தமது கன்னிப்பேச்சையும் நேற்று நிகழ்த்தினார்.

75 கோடி ரூபா செலவில் யாழ். மாவட்டத்தில் கிராமிய அபிவிருத்தித் திட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்டத்துக்கான ஐந்தாண்டு கால கிராம அபிவிருத்தித்திட்டமொன்று 75 கோடி ரூபா செலவில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் விவசாயம் நீர்ப்பாசனம், மீன்பிடித்தொழில் போக்குவரத்து கைத்தொழில் சேமநலன் ஆகிய பல்வேறு துறைகளையும் உள்ளடக்கியுள்ளது. யாழ். மாவட்டத்தின் பதினொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் இத்திட்டத்தைப் பரிசீலனை செய்தார்கள்.

காணி, காணிஅபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா யாழ்ப்பாணத்திற்கு கடந்த அக்டோபர் மாதம் விஜயம் செய்தபோது யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு உலகவங்கியின் உதவியைப் பெற்றுத்தருவதாகக் கூறியிருந்தார்.

திரு. யூ. பி. விஜயக்கோன் யாழ். மாவட்ட அமைச்சராக நியமிக்கப்பட்டதும் இவ் அபிவிருத்திட்டத்தைத் தயாரிக்கும் வேலைகள் ஆரம்பமாயின இதன் பொருட்டு குறுகிய கால அடிப்படையில் சில திட்டங்களை அமுல் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவை மூழங்காவில் குடியேற்றத்திட்டம், திருநெல்வேலி பால்நிலையம், அச்சுவேலிக் கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையம் ஆகியனவாகும்.

தேசிய வீடமைப்புத்திட்டத்தின் கீழ் கன்பொல்லை மாதிரிக்கிராமம் நிறுவப்பட்டு வருகிறது. இங்கு 330 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அடுத்தாண்டின் நடுப்பகுதியில் மைற்ரோ அலைடெலிபோன் தொடர்பு ஏற்பட்டதும் நேரடியாக டயல் செய்யலாம். யாழ். மாவட்டத்திற்கு 100 பஸ்களுக்கு மேல் புதிதாக அனுப்பப்பட்டுள்ளது.

மேலதிகமான ரயில்சேவையொன்றும் காங்கேசன்துறையிலிருந்து கொழும்புவரை நடைபெறுகிறது. எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவுக்கு அரசாங்க படகுச் சேவைகள் ஊர்காவற்றுறையிலிருந்து நடத்தப்படுகிறது.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவிற்கான கட்டடங்கள் விரைவில் அமைக்கப்படவுள்ளன.

சீமெந்து உற்பத்தியை அதிகரிப்பதற்காக காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் மேலும் ஒரு சூளை அமைக்கப்படவுள்ளது.

அமெரிக்காவின் உதவியுடன் யாழ்ப்பாணத்தின் நீர் விநியோகத்திட்டம் விஸ்தரிக்கப்படும். மகாதேவா தாம்போதி வேலைகள் 1984ல் முடிவுபெற்றதும் யாழ்மாவட்ட அபிவிருத்தி துரிதமடையும். இத் தாம்போதி வேலைகள் முடிவுற்றதும் போக்குவரத்து இலகுவாகிவிடும்.

நாளை ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)
சிவானந்தர் சிறுவர் பாடசாலையின் ஆண்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் திரு. ஜோதிசுவாமி தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவில் யாழ். ரோட்டரி கழகத்தலைவர் சட்டத்தரணி இ. பாலசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். பண்ணிசைப்புலவர் சிவஞானத்தின் மாணவர்களின் பஜனையும் இவ் விழாவில் இடம் பெறும். (வெ)

அன்ரன் கொலை வழக்கு

(யாழ்ப்பாணம்)
பொலிஸ் சார்ஜன்ட் அன்ரன் கொலை வழக்கு டிசம்பர் 1ம் தேதிவரை ஒத்திப்போடப்பட்டுள்ளது. (க)

வெளிநாடுகளில், கப்பல்களில்
தொழில்கள் பெற
நவீனமுறையில் தொழிற்பயிற்சிகள்
1-12-80 ஆரம்பமாகின்றன
(i) வெல்டிங் (Electric & Gas)—3 மாதம்
(ii வயறிங் (I.E.E. முறைப்படி)—3 மாதம்
(iii) P.M.G. Certificate—5 மாதம்
**தேசிய தொழிற்பயிற்சி
நிறுவனம்**
57, 59, பாங்சோல் வீதி,
யாழ்ப்பாணம்.

மதுரை தமிழாராச்சி மகாநாட்டின்போது

எமது ஜனாதிபதி பரிசுபெற்ற நாடகத்தை மேடையேற்ற நடவடிக்கை எடுக்கவும்

எதிர்க்கட்சித் தலைவரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
ஜனாதிபதி பரிசுபெற்ற நாடக அரங்கக் கல்லூரியின் 'பொறுத்தது போதும்'' நாடகத்தை அடுத்த ஆண்டு ஜனவரியில் மதுரையில் நடைபெறும் 5-வது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் போது அங்கு மேடை ஏற்றுவதற்கு இலங்கை கலாச்சார அமைச்சு மூலம் நடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு நாடக அரங்கக் கல்லூரி எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தைக் கேட்டுள்ளது.

இக்கல்லூரியின் பிரச்சாரச் செயலாளர் திரு. த. சு. லோகநாதன் திரு. அமிர்தலிங்கத்திற்கு இது தொடர்பாக எழுதிய கடிதத்தின் விபரம் வருமாறு:-

இலங்கை கலாச்சார அமைச்சு காலத்துக்குக் காலம் கலைஞர் குழுக்களைக் கலாச்சாரத் தூதாக உலக நாடுகளுக்கு அனுப்பி வருகின்றது. ஆயினும் இத்தூதுக் குழுக்கள் இங்குள்ள தமிழ்ப் பேசும் மக்களின் கலாச்சாரத்தையோ, கலைஞர்களையோ பிரதிபலித்தது கிடையாது.

இந்நிலையைத் தகர்க்கும் முகமாக 1980-ம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற தேசிய 'நாடக விழாவில் ஏககாலத்தில் நான்கு (சிறந்த நாடகப் பிரதி, சிறந்த இயக்குனர், சிறந்த நாடக நடிகர், சிறந்த நாடகம் - முதற் பரிசுகள்) ஜனாதிபதி பரிசில்களைத் தட்டிக் கொண்ட ஒரே நாடகமான நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பான ''பொறுத்தது போதும்'' நாடகத்தைத் தமிழ் நாட்டுக்கு அனுப்பி வைக்கும்படி கலாச்சார அமைச்சைக் கேட்கவும்.

மதுரையில் 1981 ஜனவரித் திங்களில் இடம்பெறும் ஐந்தாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது இந்நாடகம் அங்கு மேடையேற்றப்பட எமது கலாச்சார அமைச்சு நடவடிக்கை எடுக்குமா என்ற வினாவைப் பாராளுமன்றத்தில் எழுப்புங்கள்.

இக்கடிதத்தின் பிரதிகள் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை, பண்டிதர் கா. பொ. இரத்தினம், பா. உ. ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

தமிழாராய்ச்சிமகாநாடு

மதுரை மேயர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)
அடுத்தாண்டு ஜனவரிமாதம் மதுரையில் நடைபெறும் 5வது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்துகொள்ள விரும்பும் யாழ். மாநகர சபை உறுப்பினர்களின் விபரங்களை மதுரை மாநகர முதல்வர் திரு. எஸ் கே. பாலகிருஷ்ணன் யாழ் முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதனிடம் கேட்டுள்ளார்.

தமிழ் ஈழம்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அங்கு நிதி திரட்டிவருகிறார்கள் என்றால் பதுளை எம். பி. திரு. வின்சன்ட்டயஸ் சுமத்திய குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் அளிக்கும் வகையிலேயே திரு. யோகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார். (இ)

அமெரிக்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஆட்சியினர் தமது உறவினர்களுக்கு சலுகைகளை அளித்து வந்தனர் என்று குற்றம் சாட்டிவந்த இன்றைய அரசு சமீபத்தில் வெளிநாட்டு சேவையில் ஐ. தே. க. தலைவர்களின் உறவினர்களுக்குவேலை வழங்கியது என்று நுவரெலியா எம். பி: திரு. அனுரா பண்டாரநாயக்காவும், ஹரிஸ்பத்துவ எம். பி. திரு. ஆர். பி. விஜயசிறியும் நேற்று சபையில் சுமத்திய குற்றச்சாட்டுக்களுக்குப்பதில் அளித்த ஜனாப் ஹமீட் கூறியதாவது;

வெளிநாட்டுச் சேவையில் அண்மையில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் உரிய தகைமையும் அனுபவமும் பெற்றவர்களே எனினும் இவர்கள் தற்காலிகமாகவே நியமனம் பெற்றுள்ளனர் என்றார். (இ)

"கைதடியில்

ஆயுர்வேத வைத்திய கல்லூரியை ஆரம்பிக்கவும்"

(பண்டத்தரிப்பு)
கைதடியிலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டிடத்தில் இயங்கிவரும் யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடம் திருநெல்வேலியில் நிறுவப்பட்டுள்ள புதிய கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்படும்போது அக் கட்டிடத்தைமீண்டும் ஆயுர்வேத திணைக்களத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அக் கட்டிடத்தில் சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியைதாமதமின்றிஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதியை கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று யாழ் மாநகரசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்தின்பிரதிகள் பிரதமர், கல்வி அமைச்சர், சுதேச வைத்திய அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பி வைப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க)

தவறிவிட்டது

3 ஸ்ரீ 2583 கார் இன்சூரன்ஸ் பத்திரமும், காருக்கு பொருட்கள் வாங்கிய பில்களும் யாழ் நகருக்குள் தவறி விட்டன. கண்டெடுத்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். ஜோய் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், 214, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். போன்: 7822.
[7450]

**நத்தார் புதுவருட வாழ்த்து மடல்கள்
1981-ம் ஆண்டு கலண்டர்கள்
டயறிகள்**

மகத்தான அழகிய தயாரிப்புக்களான லலிதகலா, சித்திரகலா, மொட்கவுஸ், சோபாஸ் சல்மல், ஸ்ரீகலாஸ், சீவலி பென் பிறன்ஸ், ராஜம் சுஜிகலா ஆகியோரின் வாழ்த்துமடல்களும் மற்றும் மெய்கண்டான், லீலா, சீவலி கலண்டர்கள், டயறிகள், இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கக் கலண்டர்களையும், டயறிகளையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்கள்
சாரதா ஸ்ரோஸ் & புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
மாக்மிலன் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் நவம்பர் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News[illegible] at General Post Office [illegible] under No. QD 8948/78 The Eelanaadu P. B. No 49.
Grams Eelanaadu, Phone, 389